Hen Story In Tamil – கோழி கதை :- ஒரு ஊருல ஒரு கோழிக்குஞ்சு வாழ்ந்துகிட்டு வந்துச்சு ,அது இருக்குற வீட்டுல ஒரு சோம்பேறி நாய் இருந்துச்சு ,அதோட ஒரு தூங்குமூஞ்சி பூனையும் இருந்துச்சு ,அதுங்களோட சேந்து ஒரு முட்டாள் வாத்தும் இருந்துச்சு



ஒரு நாள் அந்த கோழிக்குஞ்சு வெளியில வந்து நண்பர்பலே எனக்கு சில கோதுமை விதைகள் கிடைச்சிருக்கு வாங்க அத விதைப்போம்னு சொல்லுது



அதுக்கு அந்த நாய் நா வரலனு சொல்லுச்சு ,உடனே அந்த பூன என்னால முடியாதுன்னுச்சு ,அந்த வாத்து எனக்கு தெரியாதுன்னு சொல்லுச்சு



உடனே அந்த கோழி மட்டும் தனியா அந்த விதைகளை விதைச்சது



கொஞ்ச நாளுக்கு அப்புறமா அந்த விதைகள் வளர்ந்து புது கோதுமை மணிகள் உருவாச்சு



அத பாத்த அந்த கோழிக்குஞ்சு வாங்க நண்பர்களே நாம அறுவடை செய்வோம்னு சொல்லுச்சு



அதுக்கு அந்த நாய் நா வரலனு சொல்லுச்சு ,உடனே அந்த பூன என்னால முடியாதுன்னுச்சு ,அந்த வாத்து எனக்கு தெரியாதுன்னு சொல்லுச்சு

கஷ்டப்பட்டு அறுவடை செஞ்ச அந்த கோழி குஞ்சு வாங்க நண்பர்களே நாம பொய் மாவு அறச்சிட்டு வருவோம்னு சொல்லுச்சு

Tami



அதுக்கு அந்த நாய் நா வரலனு
சொல்லுச்சு ,உடனே அந்த பூன
என்னால முடியாதுன்னுச்சு ,அந்த
வாத்து எனக்கு தெரியாதுன்னு
சொல்லுச்சு

தூக்க முடியாம அந்த கோதுமையை
தூக்கிட்டு போயி அந்த ஊருல
இருக்குற மாவு மில்லுல போயி மாவா
அறச்சிட்டு வந்துச்சு அந்த கோழி குஞ்சு



வீட்டுக்கு வந்த அந்த கோழிக்குஞ்சு வாங்க நண்பர்களே நாம சமைக்கலாம்னு சொல்லுச்சு

அதுக்கு அந்த நாய் நா வரலனு சொல்லுச்சு ,உடனே அந்த பூன என்னால முடியாதுன்னுச்சு ,அந்த வாத்து எனக்கு தெரியாதுன்னு சொல்லுச்சு

வேற வழி இல்லாம வீட்டுக்குள்ள போன அந்த கோழிக்குஞ்சு அந்த கோதுமை மாவா வச்சு புதுசா பன் கேக் எல்லாமே செஞ்சுச்சு

வெளியேவந்து வாங்க நண்பர்களே எல்லோரும் சாப்பிடலாம்ணு கேட்டுச்சு



அதுக்கு அங்க இருந்த நாய் ,பூனை மற்றும் வாத்து ஓ சாப்பிடலாமேன்னு சொல்லுச்சுங்க

அத கேட்டு சிரிச்ச அந்த கோழிக்குஞ்சு வேணா வேணா ஒண்ணுமே செய்யத்தெரியாத நாய்க்கும் ,ஒண்ணுமே செய்ய வராத பூனை க்கும் ,எதுவுமே தெரியாத வாத்துக்கும் , கேக் மட்டும் எப்படி சாப்பிட தெரியும் அதனால நீங்க உங்க வேலைய பாருங்க அப்படினு சொல்லிட்டு



வீட்டுக்குள்ள போயி தான் சமைச்சி வச்சிருந்த அந்த உணவை நல்லா சாப்பிடுச்சு

சோம்பேரித்தனமா இருந்ததால அந்த நாய் , பூனை ,வாத்துக்கு ஒண்ணுமே கிடைக்கல

TamilBc